RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# இன்னொரு ஞாயிற்றுக்கிழமை - சிறுகதை கூறும் வாழ்வியல் அவலங்கள்

ஜெ. சர்மிளா [அ, *], பே. சிவசக்தி [அ]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி, உடுமலைப்பேட்டை-642126, இந்தியா

# Life's Agonies in S. Ramakrishnan's Short Story Another Sunday

**J. Sharmila [a, *], P. Shivashakthi [a]**

[a] Department of Tamil, Government Arts College, Udumalpet-642126, India

* Corresponding Author: kannanedu@gmail.com

**ABSTRACT**

Short stories occupy a distinctive place in Tamil literature due to their simplicity, concise form, and ability to convey profound ideas through accessible language. As a literary genre, the short story has evolved into a powerful medium for portraying the diverse realities and experiences of human life. Among the prominent contemporary Tamil writers is S. Ramakrishnan (S. Ra.), an accomplished author known for his contributions to novels, short stories, essays, and travel literature. His short story collection Mazhaimaan comprises twelve stories that reflect various dimensions of human existence. This article examines the short story Another Sunday from this collection, focusing on the hardships, struggles, and miseries of human life as portrayed in the narrative.

**Keywords:** Ramakrishnan, Short Story, Another Sunday, Human Life

## முன்னுரை

தமிழ் இலக்கியப் படைப்புகளுள் மிக எளிமையாகயும், விரைவில் புரிந்து கொள்ளும் அளவிற்கு ஆற்றலுடைய சொற்களாலும் வடிவமைக்கப்படும் படைப்பாக சிறுகதைகள் அமைந்துள்ளன. சிறுகதை இலக்கியம் மனித வாழ்வின் பல்வேறு வகையான வாழ்வியல் போக்குகளைப் படம் பிடித்துக் காட்டும் உன்னதமான படைப்பாக வளர்ந்து வருகிறது. தற்காலத்தில் பிரபலமாக அறியப்பட்ட எழுத்தாளர் வரிசையில் எஸ்.இரா. என்று குறிப்பிடப்படும் எஸ்.இராமகிருஸ்ணனும் ஒருவர். நாவல், சிறுகதை, கட்டுரை, பயண இலக்கியம் என ஆளுமை மிக்க படைப்பாளர். இவரது சிறுகதை படைப்புகளுள் 'மழைமான்' என்னும் சிறுகதை தொகுப்பும் ஒன்று. இவற்றுள் பன்னிரண்டு சிறுகதைகள் உள்ளன. இத்தொகுப்பில் அமைந்துள்ள “இன்னொரு ஞாயிற்றுக்கிழமை” என்னும் கதையில் மனித வாழ்வின் அவலங்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## பாஸ்கரின் மேட்டிமைத்தனம்

மேட்டிமைத்தனம் என்பது கர்வம், அகந்தை போன்ற மனநிலையைக் குறிக்கும். இதனை ஆங்கிலத்தில் 'Elitism' என்ற சொல்லில் குறிப்பிடுவார்கள். இவ்வெண்ணம் உடையவர்கள் மற்ற மனிதர் எண்ணங்களை மதிப்பதில்லை. தன், தான், தனது என்ற சுயமே மேலோங்கிய பண்பினராக இருப்பர். தன்னுடன் படிக்கும் அல்லது பணியாற்றும் மற்றவர்களுடன் எளிதில் இணக்கமாக மாட்டார்கள். சந்தர்ப்ப சூழலால் இணைய நேரிட்டலும் மற்றவர் பண்புகள், பழக்கங்களை எளிதாக உள்வாங்குவதில்லை. 'இன்னொரு ஞாயிற்றுக்கிழமை' கதையில் பாஸ்கர் என்பவர் எதிர்நிலை கதாபாத்திரமாக படைக்கப்பட்டுள்ளார்.

பாஸ்கர் பிறப்பிலேயே பூரண வசதிவாய்ப்புகள் கொண்ட குடும்பத்தைச் சார்ந்தவர். அடிப்படைத் தேவைகள் நிரம்பப்பெற்றவர். தன் வீட்டு மாடியில் தனக்கென தனியறை ஒதுக்கி சுய ஒழுக்கத்துடன்

வாழ்பவன். பொழுதுபோக்கு, வீண்பேச்சு போன்ற தேவையற்ற செயல்களை விரும்பாதவன். தான், தன்கல்வி, தன்வாழ்வு போன்றவற்றை நிதம் சிந்தை செய்பவன். தன் வீட்டின் அருகில் வசிக்கும் தாமோதரன் உறங்க இடமின்றி தன் அறையில் தங்கிய காலத்தில் பாஸ்கர் தன்னை நடத்திய விதம் பற்றி தாமோதரன் குறிப்பிடும்போது,

"உன் பொருள் இங்கே ஒண்ணுகூட இருக்கக்கூடாது. இது என் ரூம் ……… நான் எங்கே பாயை விரித்து எந்த பக்கம் தலைவைத்துப் படுக்க வேண்டும் என்று அவன் காட்டுகிறானோ அங்கேதான் நான் படுக்க வேண்டும்" (1)

என்று கட்டளையிடும் தொனியில் பாஸ்கர் நடந்துகொண்டதாக குறிப்பிடுகிறான். இருப்பவர்கள் இல்லாதவர்க்கு உதவுதலே உலகநியதி. ஆனால் பாஸ்கர் தன்னிடம் வசதிகள் இருந்தும் மற்றவர்க்கு உதவும் குணமின்றி தான் என்னும் இருமாப்போடு இருப்பதை அறியமுடிகிறது. வசதியற்றவர்களின் வாழ்க்கையை ஏளனமாகப் பார்க்கும் போக்கு நிலவுவதை காணலாம். அவ்வகையில் இக்கால சமுதாயத்தில் வசதிபடைத்தவர்கள், பணம்படைத்தவர்கள் பெரும்பான்மையோர் இன்றளவும் இவ்வகை மனப்பான்மையோடு இருப்பது பாஸ்கர் பாத்திரம் வழி உணர்த்தப்பட்டுள்ளது.

## விருந்தோம்பல் பண்பு

தமிழர் பண்பாடு விருந்தினரை முகமலர்ச்சியுடன் எதிர்நோக்கி வரவேற்று உபசரிக்கும் வரலாற்றைக் கொண்டது. தொல்காப்பியர்,

"விருந்தே தானும் புகுவது புனைந்த யாப்பின் மேற்றே" (2)

விருந்தை புதுமை என்று கூறியுள்ளார். புதிதாக இல்லம்தேடி வருபவரே விருந்தினர் ஆவர். இவ்வுலகில் மனிதன் வாழ்வதும், பொருள் ஈட்டுவதும் எப்பயனுக்காக என்பதை திருவள்ளுவர்,

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு" (3)

என்ற குறளில் விளக்கியுள்ளார். 'இன்னொரு ஞாயிற்றுக்கிழமை' கதையில் தன் இல்லத்திற்கு வரும் நண்பன் தாமோதரனை, பாஸ்கர் வரவேற்று உபசரிக்கும் முகமாக,

"அவன் என்னைத் திரும்பிப் பார்த்துவிட்டு வெறுமனே தலையசைத்தான்……,அவன் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு கேட்டான்,"

என்பதிலிருந்து இல்லத்திற்கு வந்தவனை எதற்காக இங்கு வந்திருக்கிறான் என்பது போல சிந்தித்து வேண்டாவெறுப்பாக வரவேற்றான். தன்னுடைய வாழ்வியலை உயர்த்திக்காட்டி தாமோதரனை சிறுமைப்படுத்தும் போது பாஸ்கரனின் மேட்டிமைத்தனத்தை அறிந்துகொள்ள முடிகின்றது.

இயந்திரம் போன்று வேகமாக இயங்கும் நவீன காலகட்டத்தில் மற்றவரை உபசரிக்கும் பண்பு என்பது குறைந்துள்ளது. 'தன்னைப் போல் பிறரையும் நேசி' என்ற தத்துவம் இவ்வுலக மக்களின் அனைத்து இயக்கங்களுக்கும் பொருந்தும். ஆனால் மேட்டிமைத்தனம் கொண்ட நபர்கள் நல்ல வயலின் களைச் செடிகளாக காணப்படுகின்றனர். அவர்களால் சில நற்பண்புகளும் குறைந்து வருகின்றன என்பதை அறியமுடிகின்றது.

## அடைக்கலமும், அவலமும்

மனிதனின் அடிப்படைத் தேவை உணவு, உடை, இருப்பிடம். இருப்பிடத் தேவையை அடைக்கலம் என்பதன் உட்பொருளாகவும் கூறலாம். ஒரு மனிதனுக்கு கிடைக்கக்கூடிய அடைக்களத்தை கொண்டே வாழ்வின் அடுத்த நகர்வும் நிர்ணயிக்கப்படுகிறது. அடைக்கலம் என்பதை புகழிடம், தஞ்சம்புகுதல் என்றும் கூறலாம். தாமோதரன் தன் கல்லூரிப் படிப்பிற்காக தன் மாமா வீட்டில் தங்கிப்படிக்கிறான். மாமாவின் வீடோ சிறியது.

"ஆரம்ப நாட்களில் நான் சைக்கிள் நிறுத்தும் வராந்தாவில் ஓரமாக உறங்கியிருக்கிறேன்……. அத்தை சொன்னாள்; பக்கத்து வீட்டு பாஸ்கர் மட்டும்தான் மாடியில் தனியாக உறங்குகிறான். நீ அங்கே போய் படுத்துக்கொள்" (4)

என அத்தையின் வழிகாட்டலில் பாஸ்கரின் அறிமுகம் கிடைத்தது. அவனறையில் தங்கிய காலத்தில் சந்தித்த பல அவலங்களையும் வரிசைப்படுத்துகிறான். தாமோதரன் தனக்கு ஒரு சரியான அடைக்கலம் கிடைக்காமல் அவதியுற்ற நிலை கூறப்பட்டுள்ளது. தாமோதரன் தன் மாமா வீடு, பாஸ்கர் அறை போன்ற இடங்களில் பலவித கட்டுப்பாடுகளுடன் தங்கியிருக்கிறான். இவ்விடங்களில் தனக்கென

சுதந்திரமோ,பேச்சுத்துணையோ, விரும்பியதை செய்யும் துணிவோ இன்றி மன இறுக்கத்துடனே வாழவேண்டிய கட்டாயத்திற்கு ஆட்படுகிறான். படுத்துறங்கும் இடத்திற்குதான் இவ்வளவு கட்டுப்பாடுகள் என்றால் உண்ணும் உணவிற்கும் அதே நிலை நீடிக்கிறது என்பதை,

“மாமா வீட்டில் இரவு சாப்பாட்டினை ஏழரை மணிக்குள் முடித்துவிடுவார்கள். அதன்பிறகு சாப்பிட வந்தால் தட்டில் சாப்பாட்டைப் போட்டு சைக்கிள் கேரியரில் வைத்துக் கதவை மூடிவிடுவார்கள். எவ்வளவு பசி இருந்தாலும் அந்ததட்டில் உள்ளதுதான் சாப்பாடு. சிறிய அலுமினிய செம்பில் உள்ள தண்ணீர்தான் இரவுக்கான குடிநீர்”(5)

என்பதிலிருந்து, இருப்பிடத்திற்கும், உணவிற்கும் தாமோதரன் எதிர்கொள்ளும் அவலநிலைகள் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. கல்வி கற்கச் செல்லும் இடத்தில் தன் அத்தை வீட்டில் இடம்கொடுக்காமல் இருப்பதும், உணவினை பாத்திரத்தில் போட்டு மூடிவைத்துவிட்டுச் செல்வதும், உறங்குவதற்குச் செல்லுமிடத்தில் பாஸ்கர் அவமானப்படுத்துவதும் எனப் பல போராட்டங்களைச் சந்திக்கும் தாமோதரனுக்கு ஏற்படும் அவமானங்கள் தன் வாழ்வைப் புரட்டிப்போடுவதாக உள்ளது. உறவினர்களாலும், நண்பர்களாலும் இல்லாதவர்கள் இழிவுபடுத்தும் சூழல் இன்றளவும் நிலவி வருகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையாக உள்ளது.

## மீனாம்பாள்-பாலாமணியின் வாழ்வியல் அவலங்கள்

குடும்பங்களிலும், சமூகத்திலும் பெண்களின் முக்கியத்துவம் இன்றியமையாதது. பெண்களுக்கு பல உரிமைகள் மறுக்கப்பட்ட இருண்ட காலத்தினின்று இன்றைய நவீன யுகம் மீண்டுவிட்டது. பல சட்டங்களும், உரிமைகளும் பெண்களுக்கு ஆதரவாக முளைத்துவிட்டன. ஆயினும் பெண்கள் தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் வன்முறை, பாகுபாடு எனப் பல அநீதிகளை எதிர்கொள்கின்றனர். முதுமை மனித வாழ்வின் இயற்கை மற்றும் தவிர்க்க இயலாத ஒன்று. இக்காலகட்ட வாழ்வில் அனுபவம் பெருகுவதோடு, உடல் மனரீதியான சவால்களும் உருவாகின்றன. இம்முதுமையின் நிலைக்கருதியே வள்ளுவர் ‘நன்றியில் செல்வம்’ என்ற அதிகாரத்தில் முதுமை காலத்தில் பயன்படாத் செல்வம் பற்றிக் கூறியுள்ளார். ஏனெனில் முதுமை காலத்தில் அன்பும், அரவணைப்பும் செல்வத்தை விட அதிகமாக தேவைப்படுகிறது.

மீனாம்பாள் பாஸ்கருடைய மனைவியின் பாட்டியாவாள். மீனாம்பாளுக்கு தன் திருமணத்தோடு பிறந்த வீட்டையும், பழகிய நண்பர்களையும் பிரியும் நிலை ஏற்படுகிறது. திருமணத்திற்கு பின் நீண்ட நினைவுகளில் தன் பிள்ளைகள் வளர்ந்து தன்னை பிறந்த ஊர் அழைத்துச் செல்வார்கள் என்ற கனவுலகில் வாழ்கிறார். பிள்ளைகள் வளர்ந்து,

“ஏன்மா ஊரு ஊருனு லூசு மாதிரி பேசிக்கிட்டு இருக்கே. உன் ஊர் நாசிக்தான். நீ செத்தாக்கூட இங்கேதான் எரிக்கப்போறேன்.”(6)

என்று கூறும் வார்த்தைகள் பெற்றவளின் மனதை நோகும்படி செய்கின்றது. பிள்ளைகள் வளர்ப்பிற்காக தாயின் தியாகங்கள் அனைத்தும் இதுபோன்ற தருணங்களில் உடைபடுகின்றன. ஆயினும் தாய் என்பவள்,

என்னும் பண்புடனே காணப்படுகிறாள். மீனாம்பாள் உடல்தளர்ந்து முதிர்ந்த காலத்தில் அரவணைக்க பிள்ளைகள் தயங்குவதை,

“யார் வீட்டிலும் என்னை வைத்துக்கொள்ள இஷ்டமில்லை. பெத்த மகனே விரட்டிவிட்டான். மகள் வீட்டிற்குப் போகவே முடியாது. மருமகன் நான் செத்தால் கூட வரமாட்டேன் என்றிருக்கிறான்” (7)

என்னும் வரிகளில் வெளிப்படுத்துகிறார். மீனாம்பாளின் வயோதிக அவலம் பல தாய்மார்களின் முதுமையின் அவலத்தை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. ஆண், பெண் என்ற பாலினத்தில் பெண்களின் நட்பானது குறுகிய கால எல்லை கொண்டது. பெண்ணின் இளம்வயது நட்பு திருமணத்துடன் நிறைவு பெறுவதாக அமைகின்றது. ’இன்னொரு ஞாயிற்றுக்கிழமை’ கதையில் மீனாம்பாள்-பாலாமணி நட்பு ஆழமானதாக இருப்பதற்குச் சான்றாக தங்கள் இளமைக்காலத்தை எண்ணி முதுமையில் அசைபோடும் போது உணர்த்தப்படுகிறது. மீனாம்பாள் தன் சிநேகிதியான பாலாமணியின் இளமை நட்பை எண்ணி அவள் நோய்வாய்ப்பட்டிருக்கும் தருணத்தில் தன்னால் உதவ முடியவில்லையே என்ற மன அழுத்தத்தில் நாட்களைக் கடத்துகிறாள். அவளுக்கு ஏதேனும் ஒருவகையில் தான் உதவ வேண்டும் என்று எண்ணுகிறாள். அவளைப் பற்றி எண்ணும் போது அவளின் வாழ்க்கையை எண்ணிப்பார்க்கிறாள்.

பாலாமணி இளம் வயதிலேயே கணவனை இழந்து தன் பிள்ளைகளின் உதவி இன்றி நோயால் அவதிப்படுகிறாள். அவளது துயரை அறிந்த மீனாம்பாள் உதவ நினைக்கிறாள். பாஸ்கர் வீட்டிற்கு வந்த தாமோதரன் வழியாக பாலாமணிக்கு தான் செய்ய நினைக்கும் உதவியை குறிப்பிடும்போழுது,

“எறும்பு சேக்குற மாதிரி நான் சேத்து வைச்ச இந்த ஐநூறு ரூபாவை உனக்கு அனுப்பி வைக்குறேன். கூடவே ஒரு மப்ளர், சாமிபடம், பூஜைல வச்ச திருநீறு எல்லாம் அனுப்பி வச்சுருக்கேன்” (8)

என்று தான் அவளுக்கு உதவும் விதமாக கடிதம் ஒன்றை எழுதி அதனைத் தாமோதரனிடம் கொடுத்து உதவ வேண்டுகிறாள்.

”புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்

நட்பாறு கிழமை தரும்.” (9)

நட்பு செய்வதற்குத் தொடர்பும் பழக்கமும் வேண்டியதில்லை; ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுவதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும் என்ற குறளுக்கு இணங்க மீனாம்பாள்-பாலாமணியின் நட்பு அமைந்துள்ளது. இதனால் கணவனை இழ்ந்து வாழும் பெண்கள் நிலையும், பெற்றோருக்குப் பிள்ளைகள் உதவாத அவலமும் உணர்த்தப்படுகிறது. காலங்காலமாகப் பெண்கள் படும் துயர் எதார்த்தமான நிலையில் எடுத்துரைக்கப்பட்டது.

## முடிவுரை

மனித சமூகத்தில் நிகழும் பல்வேறுபட்ட வாழ்வியல் சூழலை இச்சிறுகதை எடுத்துரைக்கின்றது. பொருளாதார வசதியில் தன்னிறைவு கொண்ட பாஸ்கர் போன்ற பெரிய இடத்துப் பிள்ளைகள் பெரும்பாலோர் தன்னைவிட வசதி குறைந்தவர்கள், ஏழைகள் போன்றோரிடம் மனிதாபிமானமின்றி நடந்து கொள்கின்றனர். முதியோர்களின் வயோதிக சூழலை சில இளைஞர்கள் தவறுதலாக பயன்படுத்துகின்றனர். மீனாம்பாளின் நம்பிக்கையைப் பெற்ற பாஸ்கர் முதலில் தவறு செய்தாலும், பின்னர் தவறுக்காக வருந்தும் நிலையும் காட்டப்பட்டுள்ளது. இக்கதை வழி கூறப்பட்டுள்ள அவலங்கள் நம் தலைமுறைகள் தவறுகளை திருத்தம் செய்ய உதவுகின்றது.

## References

இராமகிருஷ்ணன், ஆ. அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு, பக். 228

இராமகிருஷ்ணன், எஸ். (2023) மழைமான் சிறுகதைத் தொகுப்பு, தேசாந்திரி பதிப்பகம், சென்னை

தொல்காப்பிம், பொருளதிகாரம், அகத்திணையியல்,

நேசமித்திரன், (2010) கார்ட்டூன் பொம்மைகளுக்குக் குரல் கொடுப்பவன், உயிர்மை பதிப்பகம். சென்னை

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License